பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 07 2025 **WEDNESDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி-செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஐந்து நாடுகள் பயணத்தின் நிறைவாக இன்று நமீபியா சென்றடைந்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் திரு. **Netumbo Nandi – Ndaitwah** வுடன் இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.
2. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா, உலகின் சக்திவாய்ந்த நாடாக உருவெடுத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.
3. ஜம்மு கஷ்மீர் மற்றும் உத்தரபிரதேசத்தில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் இணைய வர்த்தக தள செயல்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தீவிரவாத அமைப்புகளின் நிதி செயல்பாடுகளை கண்காணித்து வரும் நிதி கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.
4. காஸாவில் உள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.
5. அமெரிக்க **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனுஷ் ஷா – தியா சிட்டேல் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

ஐந்து நாடுகள் பயணத்தின் நிறைவாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நமீபியா சென்றடைந்தார்.

அதிபர் திரு. **Netumbo Nandi – Ndaitwah** அழைப்பின் பேரில் நமீபியா சென்ற பிரதமருக்கு **Windhoek-**ல் அந்நாட்டு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியாவின் மதிப்புமிக்க மற்றும் நம்பிக்கைக்குரிய ஆப்பரிக்க நட்புறவு நாடாக நமீபியா திகழ்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

தமது சமூகவலைதளப் பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், இந்தியா - நமீபியா இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து மேற்கொள்ளவிருக்கும் பேச்சுவார்த்தையை தாம் ஆவலோடு எதிர்நோக்கியிருப்பதாக கூறியுள்ளார்.

நமீபியா நாட்டுக்குச் செல்லும் மூன்றாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமையை திரு. நரேந்திர மோடி பெற்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது அதிபர் திரு. **Netumbo Nandi – Ndaitwah** -வுடன் பேச்சு நடத்துகிறார்.

பின்னர், நமீபியா நாட்டின் முதல் அதிபரான மறைந்த டாக்டர் **Sam Nujoma** நினைவிடத்தில் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்துகிறார்.

இதனைத் தொடர்ந்து நமீபியா நாட்டு நாடாளுமன்றத்தில் பிரதமர் உரையாற்றுகிறார்.

>>>>>>><<<<<<<

பிரேஸில் நாட்டின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா, உலகின் சக்திவாய்ந்த நாடாக உருவெடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

அகில பாரத வித்யார்த்தி பரிஷத் அமைப்பின் நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், தேச உணர்வை இளையோரிடையே ஆழமாக விதைக்கின்ற அமைப்பாக அது திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை பேரிடர்களின் போது பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை இந்த அமைப்பில் உள்ள தன்னார்வலர்கள் மேற்கொண்டு வருவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு கஷ்மீர் மற்றும் உத்தரபிரதேசத்தில் நடத்தப்பட்ட இருவேறு தீவிரவாத தாக்குதலில் இணைய வர்த்தக தளங்கள் மூலமாக பெறப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக, உலக அளவில் தீவிரவாத அமைப்புகளின் நிதி செயல்பாடுகளை கண்காணித்து வரும் நிதி கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜம்மு கஷ்மீரின் புல்வாமா மற்றும் உத்தரபிரதேசத்தின் கோரக்நாத்தில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் குறித்த விசாரணையில் இது தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகவலைதளங்கள், தகவல் செயலிகள், நிதி திரட்டுவதற்கான இணையதளங்கள் உள்ளிட்டவை தீவிரவாத செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

கடந்த ஆறு நாட்களில் ஒரு லட்சத்து 11 ஆயிரம் பேர் அமர்நாத் பனிலிங்கத்தை தரிசித்துள்ளதாக ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

பஹல்காம் மற்றும் **Baltal** வழித்தடங்கள் மூலமாக, யாத்ரிகர்கள் சுமுகமாக பயணம் மேற்கொண்டு வருவதாகவும், இனி வரும் நாட்களில் யாத்ரிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு. மனோஜ் சின்ஹா தமது சமூகவலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

ஜம்முவிலிருந்து இன்று 7 ஆயிரத்து 579 பயணிகள் அமர்நாத் யாத்திரை புறப்பட்டதாக அமர்நாத் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

குஜராத் மாநிலம், வதோதரா மாவட்டத்தில் ஆற்றுப் பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

**Anand** மற்றும் வதோதரா மாவட்டங்களை இணைக்கும் **Gambhira - Mujpur** இணைப்புப் பாலம் இன்று காலை இடிந்து விழுந்ததில் அவ்வழியே பயணித்த வாகனங்கள் ஆற்றில் விழுந்து இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்தோர் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

மாணவர்கள் நம்பிக்கையும், சமூக அக்கறையும் கொண்டவர்களாக திகழ்வது அவசியம் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் கல்லூரி ஒன்றில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – ஸ்டாலின் 35 செகண்டஸ்)

>>>>>>><<<<<<<

பெண் குழந்தைகளின் நலன் மற்றும் மனஉறுதியை பேணும் வகையில் மத்திய – மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்புக் கலை பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக கோவை மண்டல காவல்துறை தலைவர் திரு. செந்தில்குமார் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் -செந்தில்குமார்- 31 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

காஸாவில் உள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பின் ராணுவம் மற்றும் அரசியல் செயல்பாடுகளை முழுமையாக முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்கா உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

அதிபராக திரு. ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, மூன்றாவது முறையாக அமெரிக்கா சென்றுள்ள திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ, ஈரான் - இஸ்ரேல் மோதல் தொடர்பாகவும் இந்த சந்திப்பின் போது விவாதித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 109-ஆக அதிகரித்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு தொடர்பான சம்பவங்களில் 160 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அங்கிருந்து வரும் ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்ட்ராவின் கிழக்கு விதர்பா பகுதியில் உள்ள மாவட்டங்களில் பெய்த கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சாலைகள் மற்றும் சுரங்கப் பாதைகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாகவும், ஆறுகளில் நீர்வரத்து அதிகம் இருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அங்குள்ள நாக்பூர் மற்றும் வார்தா மாவட்டங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, அம்மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்க **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனுஷ் ஷா – தியா சிட்டேல் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 8-11, 11-8, 11-6, 11-7 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் **Junsung -** ஜப்பானின் **Satsuki Odo** இணையை வென்றது.

**>>>>>>><<<<<<<**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் 4வது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மான்செஸ்டரில் இப்போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

**>>>>>>><<<<<<<**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>><<<<<<<**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Nithin Kumar Sinha – Prajwal Dev** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>><<<<<<<**

ஆசிய இளையோர் பளு தூக்குதல் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவு 94 கிலோ எடைப்பிரிவில் **Parv Chaudharay** இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>>><<<<<<<**

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் ஐரோப்பிய ஹாக்கி தொடரின் முதல் ஆட்டத்தில் இந்தியா-ஏ அணி 6-1 என்ற கோல்கணக்கில் அயர்லாந்தை வென்றது.

**>>>>>>><<<<<<<**

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா, பிரான்ஸின் **Alice Robbe** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>> END <<<<<<<**